[1983 பிப்ரவரி 4

## கள்ளக்குறிச்சியில் கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 126—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சியில் மாவட்ட கூடுதல் நீதிமன்றம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியில் கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான ஆணையை, ஆணை எண். 1187, உள்துறை நாள் 15-5-82-ல் அரசு பிறப்பித்தது. அந்நீதி மன்றம் 30-7-82-லிருந்து செயல்பட்டு வருகிறது.

## குளித்தலையில் சார்நிலை நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 127—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையில் சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவக்கப்படும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; (அ) மற்றும் (ஆ) குளித்தலையில் சார்நிலை நீதிமன்றம் அமைக்கும் திட்டம் உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் இருக்கிறது தேவையான செயற் குறிப்புகள் உயர்நீதி மன்றத்திடமிருந்து பெறப்பட்டதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. கருப்பையா : Justice near the people என்ற சொல்வார்கள். நீதிகோரும் மக்கள் அவர்கள் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் நீதிமன்றங்கள் இருக்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் ஒவ்வொரு வட்டத்திலும் நீதிமன்றங்கள் அமைக்கவேண்டும் என்ற கொள்கையை தமிழக அரசு ஏற்று அதை நிறைவேற்றி இருக்கிறது. இன்றைய தினம் சப்கோர்ட்டில் நீதி பெறவேண்டும் என்று விரும்புகிற மக்கள் முசிரி, குளித்தலை, மணப்பாரை இவ்விடங்களிலிருந்து கரூர் செல்ல வேண்டியிருக்கிறது. காவிரிப்பாலம் அமைக்கப்பட்ட பிறகு குளித்தலை முசிரி இவற்றை இணைத்து அமைக்கப்பட்ட பிறகு குளித்தலை, முசிரி, மணப்பாரை, துறையூர் இவற்றிற்கு மையமாக இருக்கிற சாரணத்தால் இங்கே ஒரு சப் கோர்ட் அமைத்து இங்குள்ள மக்களுக்கு நீதி அருகாமையிலேயே கிடைக்கக்கூடிய வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1983 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இம்மாநிலத்திலுள்ள மாவட்டங்களில் உள்ள வட்டங்களில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்-கம்ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் என்ற முறையில் நீதிமன்றங்கள் அமைப்பதும் மாவட்டங்களின் மையப் பகுதிகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் சப்-கோர்ட் அமைப்பதுதான் அரசின் கொள்கை. அதை விரைவில் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கிறது. அந்த அடிப்படையில் உயர்நீதிமன்ற பரிந்துரை அரசுக்கு வரவேண்டும். அது நடைமுறையிலிருக்கிற அணுகுமுறை என்ற அடிப்படையில் விரைவில் அது வரும் என்று எதிர்பார்க்கிறோம். We will give another reminder and immediately on receipt of their reply definitely the Government will process it.

திரு. சோ. அழகர்சாமி : மாவட்டங்களின் மையப் பகுதிகளில் சப்-கோர்ட் அமைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தில் கோவில்பட்டி..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி குளித்தலையில் சார்நிலை நீதிமன்றம் அமைக்கும் திட்டம் பற்றியதாகும்.

திரு. சோ. அழகர்சாமி : கோவில்பட்டியில் ஒரு சப்-கோர்ட் அமைக்கவேண்டும் என்று வேண்டுகோள் விட்டு உயர்நீதிமன்றம் கூட சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அங்கே ஒரு சப்-கோர்ட் அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதுகுறித்து உயர்நீதிமன்றத்தின் பரிந்துரை அரசுக்கு இன்னும் வரவில்லை. வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : குளித்தலை தாலுகாவில் ஒரு கோர்ட் அமைத்ததால் குளித்தலையில் இருந்தவை மணப்பாறை, முசிரிக்கு சென்று விட்டது. குளித்தலை முன்சிப் கோர்ட் எல்லையில் 20 கிராமங்கள் தான் உள்ளன. மற்றும் இரண்டு தாலுக்காக்கள் கரூரில் வருகிறது. அவற்றை குளித்தலை முன்சிப் கோர்ட்டோடு இணைக்க ஒரு வருடமாக முயற்சி செய்தும் இதுவரை நடக்கவில்லை. அந்த இரண்டு தாலுகாக்களையும் குளித்தலை முன்சிப் கோர்ட்டோடு இணைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல் இரண்டு நீதி மன்றங்கள் அமைக்கப்பட்ட காரணத்தால் இந்தப் பிரச்னையைத் தீர்க்க Re-organisation of the jursidiction is inevitable என்ற அடிப்படையில் அது குறித்த உயர்நீதிமன்றத்தின் கருத்தை அரசு கேட்டிருக்கிறது. வந்தவுடன் அது குறித்து ஆய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.